பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை (04.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 08

# தமிழர் கைதுக்கு நாடாளுமன்றில் ஜே.வி.பி., ஐ.தே.கவும் கண்டனம்

## இ.தொ.கா. மற்றும் முஸ்லிம் எம்.பிக்கள் சமுகமளிக்காது தவிர்ப்பு

கொழும்பு,டிசெம்பர் 4

கடந்த வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தலைநகர் கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் வகைதொகையின்றி ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கைதுசெய்து, பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய கொடுமைக்கு எதிராக நேற்று நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகியனவும் சேர்ந்து இந்த இனவெறிக் கைது நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்தன.

ஆனால், இ.தொ.காங்கிரஸ் எம்.பிக்களும், முஸ்லிம் எம்.பிக்களும் நேற்றுக்காலை இவ்விவகாரம் நாடாளுமன்றில் எழுப்பப்பட்டபோது சபையில் பிரசன்னமாகாமல் இருந்ததன் மூலம் இவ்விடயத்தில் தங்கள் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் இக்கட்டு நிலையில் சிக்காமல் தவிர்த்தனர்.

கடந்த மூன்று தினங்களாகத் தலைநகரில் கோரத் தாண்டவமாடிய இந்தக் கொடூரக் கைது விவகாரம் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையாக வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் -

இ.தொ.கவினதும் மற்றும் முஸ்லிம் தரப்புகளினதும் எம்.பிக்கள் சபையில் அச்சமயம் காணப்படவேயில்லை.

மலையகத் தமிழர்களும் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டிருப்பதால், அவ்விடயம் குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசுவதற்காக தமது அனைத்து எம்.பிக்களும் அலரிமாளிகைக்கு அச்சமயம் சென்றிருந்தனர் என இ.தொ.கா. தரப்பில் நியாயம் கூறப்பட்டது.

நேற்றுக்காலை மேற்படி சர்ச்சை நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட்டபோது முஸ்லிம் எம்.பிக்களும் சபையில் இருக்காவிட்டாலும் -

தமிழர் கொடூரக் கைது தொடர்பாக அடுத்து, ஒருமித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காகத் தமிழ் பேசும் எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் உத்தியோகப்பற்றற்ற முறையில் கூடியபோது - அக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியும் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் கலந்துகொண்டார். ஆனால் இக்கூட்டத்திலும் இ.தொ.காவின் எம்.பிக்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (08ஆம் பக்கம் பார்க்க)

## கைதானோரை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவாதம்!

### மலையக மக்கள் முன்னணி கூறுகிறது

கொழும்பு,டிசெ.4

கடந்த மூன்று தினங்களாகக் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களையும் பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நானூறுக்கும் அதிகமான தமிழர்களையும் இயன்ற விரைவில் - கட்டம் கட்டமாக - விடுவிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் என மலையக மக்கள் முன்னணி நேற்று அறிவித்தது.

அக்கட்சியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகக் கட்சியின் தகவல் செயலாளர் விடுத்த பத்திரிகைக் குறிப்பிலும், அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வெளியிட்ட தகவலிலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கட்சியின் தலைவரும் அமைச்சருமான (08ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்டுள்ள தமிழர்கள் 'தலையாட்டி' முன் நிறுத்தப்படுவர்

கொழும்பு,டிசெ.4

கடந்த சில நாள்களாகத் தலைநகரிலும் சுற்றுப் புறங்களிலும் நடத்தப்பட்ட கொடூரமான கைது நடவடிக்கைகளின்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல நூற்றுக் கணக்கான வடக்கு - கிழக்குத் தமிழர்கள் தலையாட்டிகளின் முன்னால் நிறுத்தப்படவிருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

தலையாட்டிகள் முன்னால் நிறுத்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர், அந்நடவடிக்கைகளின் மூலம் அப்பாவிகள் என உறுதிப்படுத்தப்படுவோரே விடுதலை செய்யப்படுவர். எனினும் இந்நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படும். - இவ்வாறு அரச உயர்மட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு நேற்றுத் தெரியப்படுத்தப்பட்டதாக நம்பகரமாக அறியவந்தது.

விடுதலைப் புலிகளோடு செயற்பட்ட பலர் இப்போது அரசுப் பாதுகாப்புத் தரப்பினரின் தகவல் வழங்கும் உளவாளிகளாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களே முகமூடி அணிந்து தலையாட்டிகளாக நிறுத்தப்படுவர் என்றும் - (08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரைக் காப்பாற்ற ஐ.நாவும் இந்தியாவும் உடனடியாகத் தலையிடக் கூட்டமைப்பு வேண்டுதல்

கொழும்பு,டிசெ.4

வன்னியில் மக்கள் மீது நடத்தப்படுகின்ற விமானத் தாக்குதல்களையும் நாட்டின் பல இடங்களில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற கைது போன்ற அநியாயங்களையும் தடுத்து நிறுத்தித் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக ஐ.நா.வும், இந்தியாவும் உடனடியாக இவ்விடயத்தில் தலையிடவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

வன்னி விமானத் தாக்குதல் தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மீதான விமானத் தாக்குதல்கள்

கடந்த ஒரு வாரமாக வன்னியில் பல இடங்களில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் பல இடங்களில் நடத்தப்பட்ட கிபிர் விமானத் தாக்குதல்களால் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதேபோல் கிளிநொச்சியில் ஆழ ஊடுருவித் தாக்கும் படையினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலால் பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

மன்னார் முருங்கன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது பல ஆசிரியர்கள் காயமடைந்தனர்.

- இவ்வாறு வன்னி யில் மக்களை இலக்கு வைத்து பல தாக்குதல் கள் நடத்தப்பட்டு வரு கின்றன.



யாழ்ப்பாணத்தில் 10பொதுமக்களுக்கு ஒரு சிப்பாய்

யாழ்ப்பாணத்தில் மக்கள் கடத்தப்படுகின்றனர்; கொலை செய்யப்படுகின்றனர்; அங்கு பத்துப் பொதுமக்களுக்கு ஒரு சிப்பாய் என்ற அடிப்படையில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமை காரணமாக மக்கள் உள்நாட்டில் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். (08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் இடையிடையே மோதல்

கொழும்பு,டிசெ.4

வவுனியா மற்றும் முகமாலைப் பகுதியில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் இடையிடையே மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன என்று படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா - அலகெலுபொட்டுக்குளப் பகுதியில் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் - (08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சிவாஜிலிங்கத்தின் வீட்டின் முன் கிளைமோர் மீட்பு

கொழும்பு,டிசெ.4

கொழும்பு, ஜாவத்தை, கெப்பிட்டிபொல மாவத்தைப் பகுதியில் அமைந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக நேற்று சக்திவாய்ந்த குண்டு ஒன்றைப் படையினர் மீட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

நேற்றுக் காலை 8.40 மணியளவில் 'சம்மிற்' தொடர் இல்லங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள சிவாஜிலிங்கம் எம்.பியின் வீட்டுக்கு முன்பாகவுள்ள தொலைபேசிக் கம்பத்தின் கீழ் மர்மப் பொதி ஒன்று கைவிடப்பட்ட நிலையில் கிடப்பதாகப் பொதுமக்கள் இருவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸாரும் விமானப் (08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் சண்டை தொடர்கின்றது

கொழும்பு,டிசெ.4

மன்னார், வவுனியா மற்றும் முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் இடம்பெற்ற மோதல்களில் 42 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதன்போது தமது தரப்பில் 6 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பூசை, ஆராதனைகளுடன் பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம்,டிசெ.4

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் இருந்து ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பூசை, ஆராதனைகளுடன் இடம் பெறும்.

பாடசாலை அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் உட்பட பெற்றோரும் கலந்துகொள்வர்.(1)


## பெயர் மாற்றம்

சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த மகேந்திரன் செல்வகாந்தி ஆகிய நான் இன்று 04.12.2007 முதல் எனது பெயரை மகேந்திரன் செல்வகாந் என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (68618)
மகேந்திரன் செல்வகாந்.

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடியில்... திக்கத்தில்....

புதிய கல்வியாண்டு-2008
தரம் 3 முதல் O/L வரை
திக்கத்தில் 5ஆம் திகதி 3மணிக்கு
நெல்லியடியில் 6ஆம் திகதி 3 மணிக்கு
ஆரம்பம். - நிர்வாகி.
(C/54595)

## முகாமை உதவியாளர் தரம் III
## போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

04.12.2007 செவ். 2.00 - 4.00 p.m
05, 06 புதன், வியாழன் 8.00-3.00 p.m
கடந்த கால, மாதிரி வினாத்தாள்கள்
வழிகாட்டி நூல் இங்கு வழங்கப்படும்.

## திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ். வீதி, இணுவில்.


# எரிவாயுவின் விற்பனை விலை 3,000 ரூபாவாக நிர்ணயம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

குடாநாட்டில் 12.5 கிலோ எடையுள்ள எரிவாயுவின் விற்பனை விலை 3ஆயிரம் ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இப்போது கையிருப்பில் உள்ள எரிவாயுவை மேற்படி விலைக்கே விற்பனை செய்யவேண்டும் என்று யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படும் எரிவாயு அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டுவந்த காரணத்தினால் அது தொடர்பாக எரிவாயு விற்பனையாளர்களுடன் நவம்பர் மாதம் முதலாம் திகதி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. விற்பனை விலையினை மீள்பரிசீலனை செய்யும் வரை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக அதன் விற்பனை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது இது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து தகவல் பெறப்பட்டு சமையல் எரிவாயு வெற்று சிலிண்டரின் மேலதிக போக்குவரத்து செலவு கவனத்தில் எடுக்கப்பட்டு 12.5 கிலோ எடையுடைய எரிவாயுவினை 3,000 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது கையிருப்பில் உள்ள எரிவாயுவினை மாத்திரம் மேற்குறித்த விலைக்கு விற்பனை செய்வதற்கு அதன் விற்பனையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். எதிர்காலத்தில் கப்பல் மூலம் கொண்டுவரப்படும் எரிவாயுவின் விற்பனை விலை பற்றி பின்னர் அறிவிக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# ஒளிவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

நந்தார் தினத்தையொட்டி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கொடிகாமம் பங்குந்தந்தை அருட்திரு யூட் அமலதாஸும் கௌரவ விருந்தினராக பாடசாலை அதிபர் த.கந்தையாவும் கலந்துகொள்வர். (1-231)

* * * *

யாழ்ப்பாணம்,டிசெ.4

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின வருடாந்த ஒளிவிழா நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிறிஸ்தவ மாணவர் மன்றப் பொறுப்பாசிரியை செல்வி அ.மரியபுலிற்றா தலைமையில் நடைபெறும்.

தீவகக் கல்வி வலய கிறிஸ்தவ சமய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ். திருஞானசீலன் பிரதம விருந்தினராக இந்நிகழ்வில் கலந்துகொள்வார். (1)

# வணிகபீட முதலாம் ஆண்டு விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

அன்று காலை 8 மணிக்கு பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையிலும் தொடர்ந்து நடைபெறும் வழிகாட்டல் நிகழ்விலும் மாணவர்களை கலந்துகொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராசா கேட்டுள்ளார். (1)

## மரண அறிவித்தல்



### கனகரட்ணம் குணநாதன்

வல்வெட்டியை பிறப்பிடமாகவும், மாம்புரியை (புத்தளம்) வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. க. குணநாதன் அவர்கள் 01.12.2007 அன்று மாம்புரியில் காலமானார். இவர் வல்வெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் பரமகுரு கனகரட்ணம் (குஞ்சையா) காலஞ்சென்ற ஆசிரியை வேதநாயகியின் புதல்வரும், ஜீவகாந்தியின் அன்புக்கணவரும், சதீஸ்குமார் (டோஹா-கட்டார்), சுரேஸ்குமார் (Sooriyan.Com Communication), சசீலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னார் கோகிலாதேவி, காலஞ்சென்ற சபாநாதன் (சட்டத்தரணி), கருணைநாதன் (ஜேர்மனி), ரகுநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரரும், திரு. பாலசுப்பிரமணியம் (வல்வெட்டி), உமாதேவி (ஜேர்மனி), கோகிலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இராசப்பன், செல்மா ரூபாணி ஆகியோரின் மாமனாரும், பிரதீபா, பிரியதர்சனி, சுபாசினி, சனோன், இராகுல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மாம்புரியில் உள்ள அவரது இல்லத்தில் 04.12.2007 (செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணிக்கு நடைபெற்று மாம்புரி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தொலைபேசி இல:
032-2268756
0776-500456
0785-008733

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

## 22ஆம் ஆண்டு நினைவலைகள்...



அமரர்
### E.K.சண்முகநாதன்
*(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)*

தோற்றம் 14 12 1924
மறைவு 04 12 1985

*ஈர் பதினோர் ஆண்டுகள்*
*கடந்தோடினாலும்;*
*ஆறாது எம்துயரம்!*
*அன்பின் இலக்கணமாய்*
*பொறுமையின் சிகரமாய்*
*கடமையில் கண்ணியமாய்*
*ஊருக்கு உத்தமனாய்*
*வாழ்ந்து மறைந்துள்ளீர்...*
*இவ்வுலகம் உள்ளவரை*
*மறையாது உம் சுவடுகள்!*

*பிரிவால்துயறுரும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*137, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (68622)

## மரண அறிவித்தல்



### ஏ.வி.பொன்னு
**(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், குடத்தனை)**

குடத்தனையைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் ஏ.வி. பொன்னு தமது நூறாவது வயதில் கொழும்பில் கர்த்தரடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லில்லி பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நேசமலர் (தேவி), புஷ்பராணி, ஜெயராஜா, ஜெயசிங்கம், ஜெயசுந்தரம், புஷ்பசாந்தி ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற நல்லருளானந் தம், மதியாபரணன், ரதி, ரூபிணி, ரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கந்தையா, தங்கம்மா, வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.12.2007) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு 7 ஏ, கம்பல் இடம், தெஹிவளையில் இடம்பெறும் ஆராதனைக்குப் பின்னர் 4.30 மணிக்கு நல்லடக்கத்துக்காக பொரளை கனத்தை மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:
**உறவினர்கள்**

(சி/54591)

## செயலகத்தில் இன்று டெங்கு ஒழிப்புச் செயலமர்வு

டெங்கு ஒழிப்பு செயலமர்வு இன்று பி.ப. 2மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களை இச்செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க.கணேஸ் கேட்டுள்ளார். (1-207)

## வீரசிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தினமும் நூல் வெளியீட்டு விழாவும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவுச் சபையின் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் எஸ். கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் செல்வி இ.சுப்பையாபிள்ளை சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான பொ.சிவலிங்கம், செ.கனகசபாபதி ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

தொடர்ந்து பெரியார்வீரசிங்கம் நினைவாக நூல் ஒன்றும் வெளியிடப்படும். (1-224)

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## வீதிவேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2007

கீழ்க்குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் பதிவு செய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள, வற் வரி செலுத்தும் மிகத் தகைமை உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 2007.12.06 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 2007.12.07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. கேள்விகள் யாவும் 2007.12.07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீதியின் பெயருடன் வீதி வேலைக்கான கேள்வி என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. இவ்வீதி செப்பனிடலுக்குத் தேவையான தார் சபையினால் வழங்கப்படும்.
6. மேலதிக விவரங்களை யாழ்.மாநகரசபையின் நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள வீதி வேலைப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புப்பணம் (வற் வரி நீங்கலாக) | வற் |
|---|---|---|---|---|---|
| 1. | சிவகுருநாதர் அரசடி இணைப்பு வீதிகள் | M9 | 12,000.00 | 1,500.00 | 225.00 |
| 2. | புதுமை மாதா வீதி, குருநகர். | M9 | 1,500.00 | 750.00 | 112.50 |
| 3. | நாகராசா வீதி, பாண்டியன்தாழ்வு. | M9 | 4,000.00 | 1,000.00 | 150.00 |
| 4. | மத்தியூஸ் வீதி, கொய்யாத்தோட்டம். | M9 | 5,000.00 | 1,000.00 | 150.00 |
| 5. | ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை | M9 | 2,000.00 | 1,000.00 | 150.00 |
| 6. | செட்டித்தெரு உப ஒழுங்கை, (50/1)நல்லூர். | M9 | 1,500.00 | 750.00 | 112.50 |

*குறிப்பு:* வேலைகள் யாவற்றையும் 2007.12.24ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுறுத்தி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**மு.செ.சரவணபவ,**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி/54590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினி படகுசேவை மீண்டும் பாதிப்பு

நல்லூர்,டிசெ.4

நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி மீண்டும் பழுதடைந்துள்ளது.

குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து நெடுந்தீவுக்கு வந்து கொண்டிருந்த குமுதினி நெடுந்தீவு துறைமுகப் பாலத்திற்குள் நுழையும்போது கடலுள் கிடந்த பாறையில் மோதுண்டதாகவும் அதைத் தொடர்ந்து படகு சேவையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் பயணம் திறந்த படகுகளில் இடம்பெறுவதால் மழை நீரிலும் கடல் நீரிலும் குளித்துச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (203-111)




# தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

தென்மராட்சி பிரதேச மகளிர் அபிவிருத்தி பிரிவினரால் அடுத்த வருடம் (2008) நடத்தப்படவுள்ள பிரதேசமட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் பயிலுநராகப் பங்குபற்றவுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலரிடம் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை மாவட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (203-207)

# சிறுவர் பாதுகாப்புக் கழகங்கள்

நல்லூர்,டிசெ.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் பாதுகாப்புக் கழகத்தின் ஐந்து கிளைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஜே/104, ஜே/107, ஜே/ 114, ஜே/118, ஜே/119 களில் அமைக்கப்பட்டுவரும் சிறுவர் பாதுகாப்புக் கழகங்களுக்கென 27 ஆயிரம் ரூபா அனுசரணை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. (203-111)

# கொட்டடியில் மீன்சந்தை மாலைநேரம் சூடுபிடிக்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.கொட்டடி மீன் சந்தையில் மாலை நேர மீன் விற்பனை சூடுபிடித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தீவுப் பகுதிகளில் இருந்து பிற்பகல் வேளைகளில் எடுத்துவரப்படும் மீன்கள் விற்பனை செய்யப்படுவதால் மாலை நேர சந்தை சூடுபிடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (203-224)

# பாவிக்க முடியாத வாகனங்களின் விவரங்களைப் பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4

தென்மராட்சிப் பிரதேசத்தின் அடுத்த வருடம் (2008) உபயோகிக்க முடியாமல் வைத்திருக்க உத்தேசிக்கும் வாகனங்கள் பற்றிய விவரங்களை பிரதேச செயலகத்திற்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

2008 ஜனவரி தொடக்கம் ஆறுமாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் பாவிக்க முடியாதுள்ளதெனக் கருதப்படும் வாகனங்களை வைத்திருப்போர் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் தொடர்பு கொண்டு உரிய படிவம் மூலம் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(203-207)

## ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை 10ஆம் திகதி ஆரம்பம்

# நாடு முழுவதிலும் 5 லட்சத்து 29 ஆயிரம் பரீட்சார்த்திகள்; 3,988 நிலையங்களில் பரீட்சை நடைபெறும்

## யாழ்.மாவட்டத்தில் 22 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர்

அச்சுவேலி,டிசெ.4

எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு 5 லட்சத்து 29ஆயிரத்து 120 பரீட்சார்த்திகள் நாடளாவிய ரீதியில் தோற்றவுள்ளனர்.

இவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அகில இலங்கை ரீதியில் 3 ஆயிரத்து 988 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்றுள்ள மாணவர்கள் 105 பேர் பரீட்சை எழுதுவதற்கு சென்னையில் ஒரு பரீட்சை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி வியாழக்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

பரீசைக்குத் தோற்றும் மாணவர்களில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 3 லட்சத்து 99 ஆயிரத்து 163 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 29ஆயிரத்து 957 பேரும் தோற்றுகின்றனர்.

சென்னையில் பரீட்சையானது திட்டமிட்டபடி நடத்துவதற்கு வசதியாக வினாப் பத்திரங்களுடன் ஒரு குழு சென்னைக்கு செல்லவுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வசதியான முறையில் பரீட்சை எழுதுவதற்கு 3 ஆயிரத்து 988 பரீட்சை நிலையங்களும் 528 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**யாழ்.மாவட்டத்தில் 22 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்**

யாழ்.மாவட்டத்தில் இருந்து இந்த வருடம் 22 ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

யாழ்.மாவட்டம் இரண்டு அலகுகளாக பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் - I அலகில் 73 பரீட்சை நிலையங்களும் 13 இணைப்பு நிலையங்களும் ஒருங்கிணைப்பு நிலையம் ஒன்றும் யாழ்ப்பாணம் - II அலகில் 101 பரீட்சை நிலையங்களும் 14 இணைப்பு நிலையங்களும் ஒருங்கிணைப்பு நிலையம் ஒன்றும் செயற்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கான பரீட்சை வினாத்தாள்கள் இரண்டு கட்டங்களாக விமான மூலம் எடுத்து வரப்படவுள்ளன.

முதலாம் கட்டம் நாளை புதன்கிழமையும் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 13ஆம் திகதியும் எடுத்துவரப்படவுள்ளன. (203-11)

# சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் அடுத்தவருடம் 71 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,டிசெ.4

சாவகச்சேரி நகரசபையினர் அடுத்த வருடம் (2008) சபை எல்லைக்குட் பட்ட பகுதிகளில் ஏழுகோடி 71 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

2008 ஆம் ஆண்டுக்கான சபை வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரச நிதி ஒதுக்கீட்டில் ஏழு கோடி ரூபாவுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் சபை நிதி ஒதுக்கீட்டில் 71 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் விநியோகம், சுகாதார சேவைகள், பொதுச் சந்தை, நூலகம், அலுவலகம் போன்றவற்றின் அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்திற்குரிய வரவு - செலவுத் திட்டத்தின் மொத்த வருமானத்தில் 51.42 வீத நிதி அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

சபையின் 2008 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானமாக 11 கோடியே 56 லட்சத்து 47 ஆயிரம் ரூபாவாகவும் மொத்த செலவீனமாக 11 கோடியே 56 லட்சத்து 23 ஆயிரம் ரூபாவாகவும் உத்தேச வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (203- 207)

# நிகழ்வுகள்

குருநகர், டிசெ.4

யாழ், சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்தி சங்கத்தின் 47 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.அரசினர் வைத்திய சாலையின் கிளினிக் பகுதியில் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட சமூக நலத் துறை அலுவலகத்திலே நடைபெற இருப்பதாக மாவட்ட உத்தியோகத்தர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (203-288)

* * *

குருநகர், டிசெ.4

யாழ்.பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மருத்துவ உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் சேவைபுரியும் துணைமருத்துவ சேவை உத்தியோகத்தர், பரிசாரகர் போன்றோர் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளமுடியும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது. (203-51)

* * *

வைத்திய தேவைகளுக்கான அபி னைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வியாழக் கிழமை மு.ப.11 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து ஆயுள்வேத வைத்தியர்களையும், ஆயுள்வேத மருத்துவ சபையில் தங்களை வைத் தியராகப் பதிவு செய்யப்பட்ட சான்றிதழுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரியுள்ளார். (203)

* * *

வாகன சுத்திகரிப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத் திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.

திருவிழா நாள்களில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (203)

***

நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத வழிபாடுகள் தினமும் விசேட அபிஷேக பூசைகளுடன் நடைபெற்று வருகின்றன. (203-224)

***

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதையை முன்னிட்டு தினமும் காலை எட்டு மணிக்கு விசேட அபிஷேகம், பிள்ளையார் கதை படிப்பு நடைபெற்று வருகின்றன. (203-224)

# வீதிகள் சேதம்; கவனிப்பார் யாருமில்லை

வலி தென்மேற்கு,டிசெ.4

வட்டுக்கோட்டை கிழக்கு, தாவளை வீதி கடந்த பல வருடகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால் குன்றும் குழியுமாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

தற்போது பெய்து வரும் பலத்த மழையினால் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருக்கும் இவ் வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு இப் பகுதி மக்கள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளரிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(203-135)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.4

அராலி கிழக்கு முதலியார் காட்டுப் பிரதான வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-224)

* * *

குருநகர்,டிசெ.4

யாழ்.சோமசுந்தரம் வீதி பல இடங்களில் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியூடாக நாளாந்தம் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்துச் சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள்.

அத்துடன் வீதியோரங்களில் மரக்கிளைகள் வளர்ந்துள்ளமையால் இவ்வீதியூடாக வாகனங்களில் செல்வோர் நெருக்கடிக்குள்ளாகி வருகிறார்கள். உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-51)




யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப்ப பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசுத்தின விழா அண்மையில் யாழ்.இந்து கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர்களில் ஒரு பகுதியினரையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக [illegible] கல்விப் பணிப்பாளருமான வே.தி.செல்வரத்தினம், திருமதி சாரதாதேவி செல்வரத்தினம் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கு[illegible] (படங்கள் : லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்பு

### விஞ்ஞானம்

தரம் : 08,09,10,11 ஆசிரியர் : செ.இளங்கோ

திவ்வியம், கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு.

- செய்முறை வகுப்புகள், தனியான வினாவிடை வகுப்பு
- ஆண், பெண்களுக்கு தனித்தனியான வகுப்புக்கள்
- நவீன கற்பித்தல் சாதனங்களுடனான கற்பித்தல்
- வசதியான வகுப்பறை, தனியான விசேட கவனிப்பு
- 25 மாணவர்கள் மட்டும் அனுமதி

ஆரம்பம் : 05.12.2007
பி.ப 2.00 மணி

தொடர்புகளுக்கு.....
தொ.பே.இல : 021 2228069


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 • 05 • 1942

மறைவு 04 • 11 • 2007



திருமதி
## கமலாம்பிகை கிருஷ்ணசாமி
(7ஆம் வட்டாரம், நயினாதீவு)

கடந்த 04.11.2007 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.12.2007) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (68534)

நன்றி:
சி.கிருஷ்ணசாமி (கணவர்).

## ஊர்காவற்றுறையில் அபிவிருத்திக்கு தேசநிர்மாண அமைச்சு நிதி ஒதுக்கீடு

நல்லூர்,டிசெ.4

தேச நிர்மாண பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊர்காவற்றுறை பல நோ.கூ. சங்கத்தின் கட்டடத்திற்கு 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பிரதேசத்தின் துரித அபிவிருத்திக்கென 4.9 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது.

இதன்கீழ் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான கட்டடம் அமைத்தலுக்கு 5 லட்சம் ரூபாவும் 38 கிலோவாற் மின்பிறப்பாக்கி கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஊர்காவற்றுறை விவசாயப் பகுதி பழ உற்பத்திக் கிராமத்திற்கு 3லட்சத்து 70ஆயிரம் ரூபாவும் எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்கக் கட்டடத்திற்கு 10 லட்சம் ரூபாவும் நகர பொதுச் சந்தைக்கு 10 லட்சம் ரூபாவும் இத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-111)


### விற்பனைக்கு

நல்ல இனப் பலாக்கன்று, 1Kg கொய்யாக் கன்று, அப்பிள் கொய்யாக்கன்று, கொழும்பு வெற்றிலை நாற்று என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 311/1, பலாலி வீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.
077 6636619, 222 8199 (68601)


### தவறிவிட்டது

சின்னப்பு நித்தியரூபி என்பவருடைய தே.அ. அட்டை 30.11.2007 அன்று கோப்பாய்க்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடி என்னும் விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (68602)


### விமானப் பயண சீட்டு

யாழ்.-கொழும்பு
ஒரு வழி- 8750/-
379- NAVALAR ROAD,
JAFFNA.
021- 2229213 (சி/54532)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
### சேனாதிராஜா பொன்னுத்துரை
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02.08.1938 | 05.11.2007 |

05.11.2007 திங்கட்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், சகல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை 05.12.2007 காலை 7 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"நித்தியவாசா", புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (சி/54568) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### செல்லத்துரை பாலச்சந்திரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 04 |
| 04 | 11 |
| 1960 | 2007 |

கடந்த 04.11.2007 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அவர்களின் சபீண்டிகரணக் கிரியைகள் இன்று (04.12.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

280, A.V.றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். (68314) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.10.1937 | 15.12.2006 |

## திதி: 04.12.2007 தசமி

அச்சுவேலி மாப்பாண முதலியார் மரபினரும்
உலவிக்குல சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா வழித்தோன்றலும் ஆகிய
சின்னையா நடராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

தாயை இழந்து நாம் - இந்த
தரணியிலே தவிக்கையிலே
தந்தையாய் நீர் இருந்து
தாய்ப் பாசம் தனைத் தந்தீர்
அவனியிலே நாம் உயர
அன்புவழி காட்டி நின்றீர்
அல்லலின்றி நாம் வாழ
வளங்கள் பல சேர்த்து வைத்தீர்

மருமகனாக வந்த என்னை மகனாக ஏற்றவரே!
மங்கா ஒளி விளக்கே! மனதெல்லாம் நிறைந்தவரே!
என் தந்தையே நீர் எனக்கு
என் தாயன்பை இதில் கண்டேன்

எம் அன்புத் தாத்தா - எம்மை
பாசத்தைச் சொரிந்து பக்குவமாய் வளர்த்தீரே!
நேசமுடன் கதைகள் சொல்லி நெஞ்சம் நிறைந்தீரே
வாசமலராய் எமக்கு வழிகாட்டி நின்றவரே
போற்றுகின்றோம் உங்கள் ஆத்மசாந்தி பெற
சிரித்த வதனத்துடன் என்றும்
சிந்தையில் நீர் இருப்பீர்
அன்போடு எம்முடன் பழகிய நாள்களை
துன்பத்துடன் எண்ணி ஏங்குகின்றோம்
மண்ணிலே நாம் வாழும் வரை - என்றும்
மறாது உங்கள் நினைவு.



அமரர்
## சின்னையா நடராசா
(விநாயகம்பிள்ளை- ஓய்வுபெற்ற P.W.D. Dept. கணக்காய்வாளர்)

521/7, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (68538)

மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
பா.பிரதீபன் ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு இலங்கையாக மலேசியா விரைவில் மாறும்

## தமிழர் உரிமைச் செயற்பாட்டாளர் கூறுகிறார்

சென்னை,டிசெ.4

மலேசியா இன்னொரு இலங்கையாக மாறும் என்று மலேசியத் தமிழர் உரிமைச் செயற்பாட்டாளரான வேதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு வந்துள்ள அவர் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மலேசியாவில் நாங்கள் தற்போது இலங்கையில் உள்ள மலையகத்தில் தமிழர்கள் போல் நடத்தப்படவில்லைதான். ஆனால் எதிர்காலத்தில் அப்படியானதொரு நிலைமை திரும்பும் என்கிற பாரிய கவலை எமக்குள்ளது. நாங்கள் தம்ழ்நாடு முதல்வர் கருணாநிதியைச் சந்திக்க விரும்புகிறோம். அவரின் மூலமாக மலேசியத் தமிழர்களின் நிலைமை குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிக்கை வெளியிட வேண்டும்.

நாங்கள் போராட்டம் நடத்த தீர்மானித்திருந்த நிலையில் போராட்டத்துக்கு முதல் நாளான நவம்பர் 24ஆம் நாள் கோலாலம்பூர் மற்றும் கிளாங்கடைகளில் மகாத்மா காந்தியின் படங்கள் சில மணி நேரங்களிலேயே விற்றுத் தீர்ந்து விட்டன.

போராட்டம் நடைபெற்ற 25ஆம் நாள் கோலாம்பூரின் கேஎல்சிசியின் நுழைவுப் பாதையை காவல்துறையினர் தடுத்துவிட்டனர். கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் நீர் பாய்ச்சி எம்மைத் தாக்கினர் - என்று அவர் தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (அ)

# மூன்று திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வடக்கு மக்கள் அடைக்கப்பட்டுள்ளனர்

## சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.விசனம்

கொழும்பு,டிசெ.4

''வடக்கில் தமிழ் மக்கள் மூன்று இடங்களில் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.''

- என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில்கடந்தவெள்ளியன்றுஇடம்பெற்ற வரவு- செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மக்கள் மூன்று பகுதிகளில் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். முதலில் ஏ-9 பாதையை மூடி யாழ்ப்பாண மக்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டாவதாக வவுனியா உயிலங்குளம் பாதையை மூடியும் கொழும்பில் இருந்து வவுனியா செல்லும் ரயிலை மாதவாச்சியுடன் மாத்திரம் கட்டுப்படுத்தியும் வவுனியாவில் இரண்டு பகுதிகளில் எமது மக்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ரயில்சேவை மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக அம்மக்கள் பஸ்களில் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பஸ்களில் பயணம் செய்பவர்கள் மிகவும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். சோதனைக் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்தநிலையை இல்லாது ஒழித்து சமாதான சூழ்நிலையை உருவாக்கி பொதுமக்கள் நிம்மதியாக வாழ அரசு வழிசெய்ய வேண்டும் - என்றார். (சி)

## சவூதி குற்றத் தடுப்பு முகாமிலிருந்து 144 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு,டிச.4

சவூதி அரேபியாவில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 147 இலங்கையர்கள் மீண்டும் நேற்று முன்தினம் முற்பகல் நாடு திரும்பியிருக்கின்றனர்.

இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்ற இவர்கள் அங்கு பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அண்மையில் இலங்கை அரசு சவூதி அரசுடன் நடத்திய பேச்சின் பயனாக இவர்கள் அனைவரையும் மீண்டும் நாட்டுக்கு அழைக்கமுடிந்தது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

நாடு திரும்பியவர்களில் 99 ஆண்களும் 48 பெண்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## இடர்முகாமைத்துவ அமைச்சின் நேர்முகத் தேர்வு செயலகத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.4

இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு இணைப்பாளர், உதவி இணைப்பாளர், வெளிக்கள உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்குக் கோரப்பட்டிருந்த விண்ணப்பத்திற்கமையத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.சிவபாலசிங்கம் (கொழும்பு - 05), ஆ.வெங்கடரமணா (கொக்குவில்), ரி.துஸியந்தன் (கொற்றாவத்தை), கே.அனோஷன் (கோண்டாவில்), எஸ்.சுரேந்திரன் (சாவகச்சேரி), எஸ்.வசீதரன் (கந்தர்மடம்), எம்.சுமன் (பருத்தித்துறை), எஸ்.செல்வபாஸ்கர் (சாவகச்சேரி). (203)

# வலி.தென்மேற்கு வயல்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம்

வலி.தென்மேற்கு,டிசெ.4

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட நெற் பயிர்களை மடிச்சுக்கட்டி நோய் பாதித்துள்ளது.

அத்துடன் போதியளவு மழை வெள்ளம் மேட்டுக் காணிகளில் இல்லாமையால் நெற் பயிர்களின் இலைகள் மஞ்சள் பழுப்பு நிறமாக மாறி வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றன.

இதேவேளை - பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் வயல் காணிகளில் ஈரலிப்பு இல்லாமையாலும், வெள்ள நீர் இல்லாமையாலும் நெற் பயிர்களிடையே புற்கள் பெருமளவு வளர்ந்துள்ளன.

பெண் விவசாய கூலியாட்களைக் கொண்டு புல் பிங்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேசமயம் - தங்கள் மேட்டு நில வயல்காணிகளில் ஈரலிப்பு மற்றும் மழை இல்லாமையால் இப் பகுதி விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நெற் பயிர்களுக்கு இறைத்து நீர்ப் பாய்ச்சி வருகின்றனர். மண் எண்ணெய் விலை அதிகரித்துள்ளதால் இவ்வாறு இறைப்பது தமக்கு பலத்த நஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (203-135)

## தடை தாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வலி.வடக்கு,டிசெ.4

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவில் வகுப்பு - II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டும் பரீட்சை நடைபெறும். விண்ணப்பங்களைத் தோற்றும் மொழியில் பூர்த்தி செய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 30.11.2007 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (203-86)

## ஈச்சமோட்டைப் பகுதியில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.4

சுண்டுக்குழி, ஈச்சமோட்டை பகுதிகளில் பட்டப்பகலில்திருடர்களின்தொல்லை அதிகரித்துள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கூடுதலாகக் கோழிகள் களவாகப் பிடிக்கும் திருட்டுக் கோஷ்டியினரே அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

பகல் வேளைகளில் வீட்டுக் காரர் இல்லாத சமயம் பார்த்துத் திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து அங்கு கூடுகளில் நிற்கும் கோழிகளைத் திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)



அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் மணிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மணிவிழா மலரை வெளியிட்டுவைக்க அதன்முதற் பிரதியை அருட்சகோதரி மேரி திரேஸ்ராணி பெற்றுக் கொள்வதையும் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)



சொலிடார் நிறுவனத்தினால் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திக்கம் முன்பள்ளிக்கான சிறுவர் பூங்காவை சொலிடார் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் எஸ்.கிறிஸ்யங் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதையும் அருகில் சனசமூக நிலையச் செயலாளர் உட்பட விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (218)



டெங்கு ஒழிப்பை முன்னிட்டு மானிப்பாய் - வட்டு லயன்ஸ் கழக அனுசரணையுடன் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் புறச் சூழலை ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் பிறேம்குமார் தலைமையில் அப் பாடசாலை மாணவர்கள், வலிதென் மேற்கு பிரதேச உப அலுவலக ஊழியர்கள் ஆகியோர் சிரமதானப்பணி செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (படம்: நவாலிச் செய்தியாளர்)



சுப்றா கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழா பண்ணாகம் அம்பாள் கலை கலாசார மண்டபத்தில் நிறுவன இயக்குனர் ச.ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஆசிரியர் திலகம் எஸ்.சின்னத்தம்பி, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதையு காணலாம். (படம்: சுழிபுரம் செய்தியாளர்)




வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகம் சர்வதேச முதியோர்- சிறுவர் தின விழாவை அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தியது. இவ் விழாவில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர் அணியைச் சேர்ந்த 33 மாணவிகள் பொன்னாடை போர்த்தப்பட்டு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவ் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், [illegible] பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: வலி தென்மேற்கு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம்,டிசெ.4

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*2007ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்ற*
**யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலய** *மாணவனான*
சின்னப்பு - பற்றிமாராணி *தம்பதியரின் புதல்வன்*



**செல்வன் சி.சுஜன்**
*அவர்களை மென்மேலும் பற்பல பட்டங்கள் பெற்றுச் சீரும் சிறப்புடன் கல்வியிலே சிறந்த கல்விமானாய் திகழ புனித அந்தோனியாரின் ஆசீர் கிடைக்க வாழ்த்துகின்றோம்.*
வாழ்த்துவோர்:
மோகன் மாமா, டெவ்லின் அத்தை, மச்சாள் ரேஷிகா.



## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் நினைவுதின நிகழ்வும் நூல் வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் நினைவு தின நிகழ்வும் நூல் வெளியீட்டு விழாவும் நாளை (05.12.2007) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

கூட்டுறவாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.* (சி/54588)
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.**


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு**
**14 ✱ 06 ✱ 1926**
**உதிர்வு**
**04 ✱ 11 ✱ 2007**



திருமதி
**செல்லத்துரை அன்னம்மா**


வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தாயே!
உம்மை நாம் இனி எங்கு காண்போம்
உமைநினைத்து வாடுகின்றோம்.

இன்று (04.12.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லொருபாதி பிள்ளையார் கோயில் அருகில்,
தாவடி தெற்கு, கொக்குவில். (68414)
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டின் நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 | 14 |
| 04 | 12 |
| 1920 | 2006 |



**அமரர் விசாகமுத்து பொன்னம்பலம்**
**திதி: அபரப்க்க தசமி**

*மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த*
*அன்புத் தெய்வமே!*

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**
மனைவி: பொ.ஆச்சிமுத்து,
பிள்ளைகள்: செல்வநாயகம், சிவதாஸ், சிறிரஜனி -கனடா, சிறிதரன் (சுவிஸ்), சிறிராகினி (டென்மார்க்), ஜெயராசா, தேவதாஸ், சிறிராதா, சிறிரஞ்சினி, சிறிரதி - யாழ்ப்பாணம்.
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (68609)

## பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் அபிவிருத்திக்கு 3 லட்சம் ரூபா

கரவெட்டி,டிசெ.4

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை வடமேற்கு, வல்வெட்டித்துறை வடமத்தி ஆகிய கிராம மக்களின் சுயதொழில் அபிவிருத்திக்கென 'நெக்டப்' நிறுவனம் 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதி அப்பிரிவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கென மேலும் 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் இதுவரை சுயதொழில் திட்டங்களை மேற்கொள்ளவென 12 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு உதவி வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (203-70)

## எச்.என்.டி.எம் மாணவருக்கு ஐந்து தினங்கள் மதிப்பீடு

யாழ்ப்பாணம்,டிசெ.4

உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் எச்.என்.டி.எம் கற்கைநெறி பயின்ற மாணவர்களுக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் ஐந்து தினங்கள் மதிப்பீட்டை நடத்தவுள்ளது.

மேற்படி மதிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்படவேண்டிய 2000-2004 ஆம் ஆண்டுக்கான எச்.என்.டி.எம் மாணவர்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவுசெய்யுமாறு நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)

## அருணோதயாக் கல்லூரியில் புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 6 மாணவர்களும் தேசிய மெய்வன்மைப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்ற வீரன் செ.நவநீதனும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக்கௌரவிப்பு நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொள்வார்.


## விற்பனைக்கு

சண்சயின் பாக்
சொப்பிங் பாக் No I
சொப்பிங் பாக் No II
சொப்பிங் பாக் 11x16
லஞ்சீற்
7x10 பாக்
7x5 பாக்
சிக்கின் பாக் No I

**A.J.M. பல்பொருள் வாணிபம்,**
*இல.9, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (68617)

## பாலன் மில்ஸ்

தேங்காய் கொப்பறா, இலுப்பைப் பருப்பு, எள் (நல்லெண்ணெய்) போன்றவை 3Kg இருந்து 1000Kg வரை நவீன இயந்திரத்தில் எண்ணெய்யாக உடன் வடித்துக்கொடுக்கப்படும்.
(எம்மிடம் சுத்தமான நல்லெண்ணையும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**"பாலன் மில்ஸ்"**
*மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.* (68615)


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## வரவு-செலவுத் திட்டம் - 2008

2008ஆம் ஆண்டுக்கு கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு - செலவுத் திட்டம் - 2007ஆம் ஆண்டு மார்கழி மாதம் 04ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு மாநகர சபை அலுவலக நேரத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 252இன் பிரிவு 212இன் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**திரு.மு.செ.சரவணபவ,**
[illegible]
*மாநகராட்சி மன்றம்,*
*யாழ்ப்பாணம்.* (சி/54589)

## பாலஸ்தாபனம்

### கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் பாலஸ்தாபனம் 05.12.2007 கார்த்திகை 19 ஆம் நாள் புதன்கிழமை காலை 7.00-8.00 மணிக்கு பந்தல் கால் தொடர்ந்து கிரிகைகள் நடைபெற்று 06.12.2007 கார்த்திகை 20ஆம் நாள் வியாழக்கிழமை தனு லக்கினம் சுவாதி நட்சத்திரத்தில் காலை7.00-7.40 மணிக்கு பாலஸ்தாபனக் கிரியைகள் இனிது நிறைவேற அம்பிகை திருவருள் பாலித்துள்ளார்.

அனைத்து அடியார்களும் இந்நிகழ்வில் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

(68616) **ஆலய பரிபாலன சபையினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 16 | 14 |
| 04 | 12 |
| 1937 | 2006 |



**அமரர் பொன்னுத்துரை வில்வராஜா**
*(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/இந்துக் கல்லூரி)*
திதி: தசமி (04.12.2007)

**அறிவின் ஆசானாய்**
**அன்பின் கணவனாய்**
**பாசத்தின் தந்தையாய்**
**பண்பின் மாமனாய்**
**கருணையின் பேரனாய்**
**கம்பீரமாக எமைக் காத்த தெய்வமே!**
**ஆண்டு ஒன்று மறைந்தாலும்**
**உங்கள் ஆத்மா என்றும் எங்களுடன்...**

"விநாயகர் இல்லம்",
இல.06, செல்லர் வீதி,
நல்லூர். (68603)

இதய நெருடலுடனும் ஈர விழிகளுடனும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி காசிநாதன்



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி காசிநாதன் 02.12.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான முத்துத்தம்பி காசிநாதன் அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியரின் மருமகளும் ஜெயலட்சுமி (இந்தியா), அங்கையற்கன்னி (மட்டக்களப்பு), சந்திரவதனா, கோவிந்தராசா ஆகியோரின் சகோதரியும் சந்திரகுமார் (டென்மார்க்), சூரியகுமார் (கனடா), ரவீந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் பிறேமலதா, மொறின், தெய்வானை ஆகியோரின் மாமியும் பானுஜா, பத்மசிறி, மயூரி, பிரியரஞ்சனி, சண்முகஹரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2007) புதன் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.108/A, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (68607)

தகவல்:
**ந.கோவிந்தராசா**
*(சகோதரன் - பெயின்ரர் மாமா),*
**மா.ஈஸ்வரராஜன்** *(பெறாமகன்).*

### அந்தோனிப்பிள்ளை அருள்சீலி



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அருள்சீலி 02.12.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அன்ரன் (Swiss), விஜி (Germany), அருள்செல்வி, அஞ்சலாதேவி, அன்ரன் றஜன் (Italy), மேரி டயானா சில்வேசினி ஆகியோரின் அன்புத் தாயும் மேரி ஜெபிற்றா, மேரி அஞ்சலா, ஜெராட், நெல்சன் ஆகியோரின் பாசமிகு மாமியும் நிலானி, மெலானி, நிக்கோலன், சேபியா, நியோமி, சயந்தன், ஜன்சி, கெஷன் ஆகியோரின் பேர்த்தியும் சந்திரனின் (France - பெறாமகன்) பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கச் சடங்குகள் இன்று (04.12.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சென்.பீற்றேஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Lourtan Lane,
Manipay. (68614)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தடுத்து நிறுத்த முடியாத நிலையில் தறிகெட்டு ஓடும் யுத்தத் தீவிரம்

இன ஒடுக்கல் தீவிரத்திலும் யுத்த வெறி முனைப்பிலும் தாண்டவமாடும் 'மஹிந்த சிந்தனை' அரசு நாட்டின் பொருளாதாரத்தைப் போருக்காகக் கொட்டியழிக்கின்ற கைங்கரியத்தைக் கனகச்சிதமாக நிறைவுசெய்து வருகின்றது.

2006 இல் - 'மஹிந்த சிந்தனை' அரசின் - முதலாவது வரவு, செலவுத்திட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செலவினத்துக்கு 9 ஆயிரத்து 600 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் வருட முடிவில் பாதுகாப்புச் செலவினம் 11 ஆயிரத்து நூறு கோடி ரூபாவைத் தாண்டியது.

அதேபோல இந்த ஆண்டிற்கு எனக் கடந்த, வருட இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்காக 13 ஆயிரத்து 900 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் நவம்பர் மாதம் முடிவடையும் போதே 15 ஆயிரத்து 600 கோடி ரூபாவைத் தாண்டிவிட்டது பாதுகாப்புச் செலவினம்.

அடுத்த ஆண்டுக்கு 'மஹிந்த சிந்தனை' பட்ஜெட் மூலம் பாதுகாப்புத்துறைக்கு 16 ஆயிரத்து 600 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு நாளைக்கு சுமார் 46 கோடி ரூபா என்ற கணக்கில் பாதுகாப்பு செலவினத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் - அரசுத் தலைவர்களின் யுத்தத் தீவிர அறிவிப்புகளை நோக்கினால் - இத்தொகை அடுத்த ஆண்டில் இருபதாயிரம் கோடி ரூபாவைத் தாண்டுவது உறுதி என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆனாலும் அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினத் தொகை இதைவிடவும் அதிகமாக இருக்கும் என்றும் -

உண்மையில் பாதுகாப்புச் செலவினமாக வெளிப்படுத்தப்படும் தொகை குறைத்து மதிப்பிடப்பட்ட அளவே என்றும் -

உள்வீட்டுத் தகவல்கள் விடயத்தைப் போட்டு உடைக்கின்றன.

அடுத்த ஆண்டில் பெரும் தொகைக்கு யுத்த ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்படவிருக்கின்றன. இவை பெரும்பாலும் ஒரு வகை வாடகைக் கொள்வனவு அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது மொத்தப் பெறுமதியில் ஒரு சிறு பகுதியை ஆரம்பக் கட்டணமாகச் செலுத்திவிட்டு அந்த ஆயுதத் தளபாடங்களை இலங்கை அரசு பெற்றுக்கொள்ளும். பின்னர் வருடாவருடம் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற கணக்கில் நீண்ட காலக் கடன் அடிப்படையில் நிலுவை செலுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஆரம்பக்கட்டணமாக அடுத்த ஆண்டில் செலுத்தப்படும் தொகையை மட்டுமே உள்ளடக்கி, அடுத்த ஆண்டுக்கான யுத்தச் செலவினம் 20 ஆயிரம் கோடி ரூபாவை எட்டும் எனக் குத்துமதிப்பாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

ஆனால், அடுத்த ஆண்டில் புதிதாகக் கொள்வனவு செய்து, வாங்கிக் குவிக்கும் யுத்த தளபாடங்களுக்கான முழு மதிப்பையும் - அல்லது அக்கொள்வனவுகள் மூலம் அரசுக்கு ஏற்படும் முழுக் கடன் பொறுப்பையும் - சேர்த்தால் யுத்தச் செலவினத் தொகை இன்னும் பல்லாயிரம் கோடி ரூபாவால் அதிகரிக்கும் என்பதே உண்மை நிலைவரமாகும்.

வெளிப்பகட்டுக்கு அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் என அரசு குறிப்பிடும் 16 ஆயிரத்து 600 கோடி ரூபா நிதியே உண்மையான யுத்தச் செலவினம் என்று கருதினாலும் கூட, பாதுகாப்புச் செலவினமாக இலங்கையர் ஒருவருக்கு 8 ஆயிரத்து 536 ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் நாட்டுப் பிரஜை ஒருவரின் சுகாதார நலனுக்கு அடுத்த ஆண்டில் ஆக 2 ஆயிரத்து 359 ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்கிறது புள்ளி விவரக் கணக்கு.

அது மாத்திரமல்ல, அரசின் செலவினத்தில் 38.5 சதவீதம் பொதுக்கடன் மீள் செலுத்துகையில் வீணாகின்றது.

இந்தச் சீத்துவத்தில்தான் மேலும் மேலும் கடன்களை வாங்கி, பேரழிவும், போரழிவும் தரும் யுத்தத்துக்குக் கொட்டிச் சீரழிக்கத் துடியாய்த் துடிக்கிறது 'மஹிந்த சிந்தனை' அரசு.

யதார்த்த நிலைமை புரியாமல் அரசு வரிக்கும் யுத்தத் தீவிரக் கொள்கைப் போக்கால் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழும் ஆபத்து வேகமாக நெருங்கி வருகின்றது.

விலைவாசி அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து, அன்றாட வாழ்வுக்கே - தினசரி வயிற்றுப்பாட்டுக்கே - அல்லாடும் நிலைக்கு இலங்கைத் தீவின் சராசரிக் குடும்பம் ஒவ்வொன்றும் வந்துவிட்டது.

நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளிப்பதற்கு அரசு வழங்கிவரும் மானியக் கொடுப்பனவுகளும் நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டன. சர்வதேச நிதி வழங்குநர் அமைப்பான சர்வதேச நாணய நிதியம் நேரடியாகவே - ஒளிவுமறைவின்றி - இலங்கை அரசுக்கு இதனைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

'மானியங்களை வழங்கி, பிரச்சினைகளை சமாளிக்கும் கொள்கைப்போக்கு விபரீத விளைவுகளை பொருளாதாரத்தில் ஏற்படுத்தப் போகின்றது. எனவே மானியக் கொடுப்பனவுகளை - குறிப்பாக எரிபொருளுக்கு வழங்கும் மானியத்தை - வெட்டுங்கள்!' - என்று அரசுக்குக் காட்டமாக உரைத்திருக்கின்றது நாணய நிதியம்.

இப்படிப் பல தரப்பிலும் நியாயமும், நீதியும், யதார்த்தமும் அறிவுரையாக - ஆலோசனையாக- வழிகாட்டலாக - எடுத்துரைக்கப்பட்டாலும் -

நாட்டின் பொருளாதாரம் சீரழியும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டாலும் -

யுத்தவெறி அரக்கன் என்ற பிடியில் சிக்கி நிற்கும் அரசு, அதை விட்டு மீளுவதாகவோ, அமைதி வழித் தீர்வு குறித்து ஆத்மார்த்தமாகச் சிந்திப்பதாகவோ இல்லை.

'முதலையும், மூர்க்கனும் கொண்டது விடா' என்பர். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பர். அந்தச் சிந்தனையில் ஓடுவோரை யார்தான் தடுத்து நிறுத்தமுடியும்?

# தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களை கொல்ல அல்லது கைது செய்ய முயற்சி!

## கிளைமோர் மீட்புக் குறித்து சிவாஜிலிங்கம் காட்டம்



கொழும்பு,டிசெ.4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் வீடுகளுக்கு அருகே கிளைமோர்க் குண்டுகளை ஒளித்துவைத்து அவர்களைக் கொலை செய்ய அல்லது கைதுசெய்ய அரசு திட்டம் தீட்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான சிவாஜிலிங்கம் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்று நாடாளுமன்றில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு கூறியவை வருமாறு:-

இன்று(அதாவது நேற்று திங்கட்கிழமை) காலை நான் கொழும்பு - 05, கெப்பிட்டிபொல மாவத்தையில் அமைந்துள்ள எனது வீட்டில் இருந்து நாடாளுமன்றத்திற்கு வரத் தயாரான போது இராணுவத்தினரும், விமானப் படையினரும் என்னைச் சூழ்ந்துகொண்டு என்னை வெளியேறவிடாமல் தடுத்தனர்.

இப்பகுதியில் கிளைமோர் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது என்றும் எனது வீட்டை சோதனையிடவேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

நான் நாடாளுமன்றிற்குச் செல்ல வேண்டும் என்றும், எனது வாகனத்தையும் எனது மெய்ப்பாதுகாவலர்களையும் சோதனை செய்துவிட்டு எங்களை அனுப்புங்கள் என்றும் நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

அவர்கள் 15 நிமிடங்கள் தாமதித்தே என்னை அனுப்பினர். ஆனால், இங்கு வந்தபிறகு எனது வீட்டுக்கருகே கிளைமோர் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது.

இது அரசின் திட்டமிட்ட செயல். அதிஉயர் பாதுகாப்பு வலயமான கெப்பிட்டிபொல மாவத்தையில் எப்படி கிளைமோர் வைக்கப்பட முடியும்?

நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாகனத்தை நிறுத்தி நடையில்தான் அந்த இடத்திற்கு வரவேண்டும். அப்படியான நிலையில் யார் அங்கு குண்டை வைக்க முடியும்?

உண்மையில் அரசு இவ்வாறான செயல்கள் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைக் கொலை செய்ய அல்லது கைதுசெய்யத் திட்டமிட்டுள்ளது என்றே எனக்குத் தோன்றுகின்றது.

எமது மக்களுக்காக நாம் எந்த விதமான பிரச்சினைகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். - என்றார் அவர். (சி)

# பஸில் எம்.பியானதும் நல்லது என நினைத்தேன் ஆனால் அவர் தமிழர் விரோதியாகிவிட்டாரே!

## பூஸாவில் அடைக்கப்பட்டோர் 3 நாள்களாகப் பட்டினி

கொழும்பு,டிசெ.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தவர்கள் இப்படித் தமிழர் விரோதமாக நடந்து கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கவேயில்லை. பஸில் ராஜபக்ஷ எம்.பியானபோதும் நாம் மனப்பூர்வமாக அந்நியமனத்தை விரும்பி வரவேற்றோம். தமிழர்களுக்கு நல்லது செய்வார் என எதிர்பார்த்தோம். ஆனால், நமது நம்பிக்கை வீண் போய்விட்டது. அவரும் தமது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ போல தமிழர் விரோதியாகிவிட்டாரே....!

- இப்படி நாடாளுமன்றத்தில் கவலையும், ஆதங்கமும், விசனமும் தெரிவித்தார் ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

தமிழர் கைதுக் கொடூரம் குறித்து நேற்று நடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

### 3 நாள்களாகப் பட்டினி

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே அப்பாவித் தமிழர்கள் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லை. மூன்று நாள்களாக அந்தக் கைதிகள் பட்டினி போடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர்கள் கைதுசெய்யப்படுவதை மனிதாபிமான அடிப்படையில் தடுக்க வேண்டும்.

பூஸா முகாமில் நேரடியாகச் சென்று தமிழ் மக்கள் படும் துன்பங்களை பார்த்தேன்.

அடைத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரம் பேரில் 200 பேர் மலையக இளைஞர்கள், யுவதிகள். மொத்தம் 52 பெண்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரத்தில் எந்தக் கோலத்தில் கைது செய்யப்பட்டனரோ அதே ஆடைகளுடன் மாற்றுடை ஏதும் இன்றி அவர்கள் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து பூஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கு மூன்று நாள்களாகச் சரியான உணவுகள் வழங்கப்படவில்லை. பின்னர் வழங்கப்பட்ட உணவினால் வாந்தி, வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது.

அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் 4, 5 மலசல கூடங்கள் மட்டுமே உள்ளன. அத்தனை பேரும் ஒரு மணி நேரத்துக்குள் தமது காலைக் கடன்களை முடிக்க வேண்டும்.

### மந்தைகள் போல அடைக்கப்பட்டுள்ளனர்

முடிந்ததோ, இல்லையோ ஒரு மணி நேரத்திற்குள் மீண்டும் ஆட்டு மந்தைகளைப் போல் அடைக்கப்பட்டு விடுகின்றனர்.



பூஸாவில் கோர வேதனையை இவர்கள் அனுபவிக்கின்றனர். எம்மைக் கண்டதும் அவர்கள் கதறி அழும் காட்சி பெரும் கவலைக் கிடமாக இருக் கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 25 வருட நாடாளுமன்ற அனுபவம் உடையவர். மக்களின் துன்பம் அறிந்தவர். எனவே தமிழ்மக்கள் வகைதொகையின்றி கைது செய்யப்படுவதை மனிதாபிமானத்துடன் அவர் அணுக வேண்டும். அவர்களை விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வந்தபோது அவராவது தமிழ் மக்களுக்காகப் பேசுபவராக இருப்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவரும் தமிழர் விரோதியாக செயற்படுவது பெரும் வேதனை அளிக்கின்றது.

நல்ல பௌத்தர்கள், தமிழர்கள் துன்புறுத்தப்படுவதை அங்கீகரிக்க மாட்டார்கள்.

எனவே பூஸா முகாமிலும் ஏனைய இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் அனைவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் மகேஸ்வரன் எம்.பி.

(அ-சி)

# மலையகத் தமிழர்களை விடுவிக்க இ.தொ.காவிடம் ஜனாதிபதி உறுதி

கொழும்பு, டிசெ.4

கடந்த சில நாள்களாகக் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் மலையகத்திலும் அரச பாதுகாப்புத் துறையினர் மேற்கொண்ட கைதுக் கொடூரத்தின் போது பிடிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான மலையகத் தமிழர்களை அவர்கள் மலையகத் தமிழர்கள் என அடையாளம் காணப்படுமிடத்து விடுவிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிமொழி அளித்திருக்கின்றார்.

நேற்று ஜனாதிபதியை இ.தொ. காங்கிரஸின் எம்.பிக்கள் நேரில் சந்தித்துப் பேசியபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கின்றது.

நேற்று இ.தொ.காவின் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான ஆர்.யோகராஜனும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினர்.

பின்னர் அவர்கள், பிரதி அமைச்சர்கள் முத்து சிவலிங்கம், செல்லச்சாமி, சச்சிதானந்தன் மற்றும் ஜெகதீஸ்வரன் எம்.பி ஆகியோரைக் கூட்டிச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

கைதான மலையக இளைஞர், யுவதிகளின் உறவினர்கள் இருபது பேரையும் அவர்கள் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட மலையகத் தமிழர்களை விடுவிக்கத் தாம் உடன் நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி அப்போது உறுதியளித்தார் என்று தெரியவந்தது.

### ஜனாதிபதியிடம் இருந்து வந்த கருத்து

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டபோது, நீங்கள் மலையகத் தமிழர்களின் பிரச்சினையை பாருங்கள் என்ற சாரப்படவும், கைதான வடக்கு, கிழக்குத் தமிழர்கள் முறையான விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவர் என்ற கருத்திலும் ஜனாதிபதியின் பதில் அமைந்ததாகத் தெரியவருகின்றது.

அத்துடன், கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழர்கள் தொடர்பாகவும் அவர்கள் அப்பாவிகள் என்பதையும் இ.தொ.கா. தலைமை தனிப்பட்ட முறையில் உறுதியளித்தால் அத்தகையோரை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுக்க இணங்கினார் என்றும் தெரியவந்தது. (சி)

### நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 19 | புதன்கிழமை |
| | 05.12.2007 |
| திதி : ஏகாதசி | பி.ப. 03.38 |
| நட்சத்திரம் : | சித்திரை |
| | பின்னிரவு 03.26 |
| [illegible] | : [illegible] |
| ராகுகாலம் | : 12.16 - 01.46 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடலத்தை இனங்காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.4

கொடிகாமம் பொலீஸாரால் கடந்த 17ஆம் திகதி ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் இதுவரை எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளது. உரித்துடையோரை ஐந்து நாள்களுக்குள் சடலத்தை பொறுப்பேற்குமாறு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-1)


# ஆஸியின் ஷேன் வோர்னின் சாதனையை கண்டியில் நேற்று முறியடித்தார் முரளி

## வெற்றியின் நினைவாக ரூ.500 முத்திரை வெளியிடப்பட்டது

கண்டி,டிசெ.4

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற உலக சாதனை இப்பொழுது முரளிதரனின் வசமாகியிருக்கின்றது.

கண்டியில் நடைபெற்றுவரும் இங்கிலாந்து அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் நேற்றாகும். ஆயிரமாயிரம் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்க இங்கிலாந்து அணிக்கான 89ஆவது ஓவரை வீச வந்தார் முரளிதரன். அந்த ஓவரின் நான்காவது பந்தில்தான் சாதனை அரங்கேறியது. அந்தப் பந்தை எதிர்கொண்டவர் கொலிங்வூட். மிகவும் தாழ்வாக வந்த பந்து அவரை ஏமாற்றியபின் 'மிடில்', 'ஓவ்' ஸ்ரம் புகளை தகர்த்தெறிந்தது. அத்துடன்



முரளிதரன் சாதனை உச்சத்துக்கே சென்று விட்டார்.

இதுவரைகாலமும் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனை ஆஸியின் ஷேன் வோர்னின் வசமிருந்தது. அவர் 145 டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்டத்தில் இந்தச் சாதனையை முரளி சமன் செய்திருந்தார். நேற்று கொலிங்வூட்டின் விக்கெட்டைக் கைப்பற்றியவுடன் உலக சாதனையை முரளி தனதாக்கிக் கொண்டார்.

டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற ஒவ்வொரு நாட்டுக்கும் எதிராக 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை யும் முரளிக்கு உண்டு. நேற்று கொலிங் வூட்டின் விக்கெட்டைக் கைப்பற்றியபோது இங்கிலாந்துக்கு எதிராக சொந்த மண்ணில் அவர் 50ஆவது விக்கெட்டைப் பதிவு செய்தார் என்று குறிப்பிடத்தக்கது.

கொலிங்வூட்டுக்குப் பின்னர் மத்தியூ ஹோகாட்டின் விக்கெட்டையும் முரளி கைப்பற்றினார். முரளிதரன் 55 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சாதனை படைத்த முரளிதரனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை -

நாடாளுமன்றத்திலும் நேற்று முரளிக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேசையில் தட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

வாழ்த்துத் தெரிவிக்க தனியான பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்று பிரதி சபாநாயகர் கீதாஞ் சன குணவர்த்தன சபையில் அறிவித்தார்.

முரளியின் சாதனையை நினைவு கூர்ந்து வட்டவடிவிலான 500 ரூபா முத்திரை ஒன்றை அரசு நேற்று வெளியிட்டுள்ளது. (1-சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக் குண்டு செயலிழக்க வைக்கும் படைப் பிரிவினரும் பொதி கிடக்கும் இடத்திற்கு விரைந்தனர்.

அதன் பின்னர் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் பொதியில் வைக்கப்பட்டிருந்த குண்டினை செயலிழக்க வைத் தனர்.

செயலிழக்க வைக்கப்பட்ட இக்குண்டு அதி சக்தி வாய்ந்த 'சி - 4' ரக வெடிமருந் தினால் தயாரிக்கப்பட்டு ஒன்றரை கிலோ எடையுடையதாக இருந்தது என்றும் -

அது தன்னியக்கக் கருவி மூலம் வெடிக்க வைக்கக் கூடியது என்றும் - படையினர் தெரிவித்தனர்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள இப்பகுதிக்குள் குண்டு எப்படி எடுத்து வரப்பட்டது என்பது குறித்து விசாரணைகளை முடுக்கி விட்டிருக்கும் புலனாய்வா ளர்கள், கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதால், மர்ம நபர்கள் வேறு வழியின்றி இக்குண்டை அங்கு கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனக் கருதுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

கறுவாத்தோட்டப் பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (07ஆம் பக்கமும் பார்க்க)

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற பிறிதொரு மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், அவர்களின் இரு பதுங்குழிகளும் தாக்கியழிக்கப்பட்டிருக்கின்றன என்றும் படைத்தரப்புச்செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## கைதுசெய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போர் இந்த முகமூடி ஆள்கள் முன் நிறுத்தப்படுவர் என்றும் -

புலிகளுடன் தொடர்புடையவர்களை அவர்கள் அடையாளம் கண்டு தலையாட்டினால், அவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விரிவான விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் - கூறப்படுகின்றது. (சி)

## தமிழரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடப்பெயர்வு காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் சொத்துகள் சூறையாடப்படுகின்றன.

**கொழும்புக் கைதுகள்**

அதுமாத்திரமன்றி கொழும்பில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களில் சுமார் 500 பேர்வரை பூஸா தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபெரும் அநீதி. அப்பாவிப் பொதுமக்கள் இவ்வாறு கைதுசெய்யப்படுவதை நாம் ஏற்கமாட்டோம்.

இம் மக்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக ஐ.நாவும் இந்தியாவும் தலையிட்டு இவற்றைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முடியாதவாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் கைகளை அரசு கட்டியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் சுயமாக இயங்கும் வகையில் அதியுயர் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் - என்றார் அவர். (சி)

## கைதானோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெ. சந்திரசேகரன், பிரதி அமைச்சர் பெ. இராதா கிருஷ்ணன், செயலாளர் நாயகம் எஸ். விஜய குமாரன், நிதிச் செயலாளர் சரத் அத்துக்கோறளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

கைதுசெய்யப்படுவோரின் உண்மை நிலைமை குறித்தும் அவர்கள் எந்தவிதப் பயங்கரவாதச் சம்பவங்களுடனும் தொடர்பற்றவர்கள் என்பதையும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் தலைமை உறுதிப்படுத்தினால் அத்தகையோரை உடன் விடுவிக்கவும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.என்.இலங்கக்கோன், கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் மெதிவக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

# தமிழர் கைதுக்கு நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் தமிழர் கைது நடவடிக்கைக்கு எதிராக ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் குரல் எழுப்பின.

வழமைபோல மலையக மக்கள் முன்னணியின் சார்பில் பிரதி அமைச்சர் இராதா கிருஷ்ணன் இந்தக் கைது நடவடிக்கை களைக் காட்டமாகக் கண்டிக்க, அமைச்சர் சந்திரசேகரனோ வாய்மூடி மௌனமாகப் பார்த்திருந்து அரசுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொண்டார்.

அரசின் இந்தத் தான்தோன்றித்தனமான கைது நடவடிக்கையை நேற்று நாடாளுமன்றத்தில் கண்டித்த பலரும் - ஏற்கனவே கொழும்பில விடுதிகளில் தங்கி யிருந்த தமிழர்களைப் பலவந்தமாக வவுனியாவுக்குக் கடத்திச் சென்று நீதிமன்றத்தால் மூக்குடைக்கப்பட்ட அரசு, இப்பொழுது தலைநகரில் தமிழர்களை வகை தொகையின்றிக் கைது செய்து பூஸாவில் அடைத்துவைத்து, சர்வதேச சமூகத்தின் கண்டனத்திற்கு உள்ளாகி மூக்குடைபடப் போகின்றது என்று விசனம் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

**மாவை உரை**

இவ்வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில் -

தமது உடைமைகள், உறவுகள் அனைத்தையும் விட்டு தலைநகரில் தஞ்சம் அடைந்த தமிழர்களையும் வகை தொகையின்றி கைதுசெய்து பூஸா முகாமில் அடைத்து வைத்துள்ளது அரசு. அப்பாவி மலையத் தமிழர்களும் இத்தகைய துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை மனிதா பிமானத்துடன் விடுதலை செய்யவேண்டும். - என்று தெரிவித்தார்.

மாவை சேனாதிராசாவின் உரையைத் தொடர்ந்து ஐ.தே.க. உறுப்பினரான லக்ஷ் மன் கிரியெல்ல, மலையக மக்கள் முன் னணியைச் சேர்ந்த பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன், மேலக மக்கள் முன்னணியின் மனோ கணேசன், ஐ.தே.கட்சி யின் மகேஸ்வரன் மற்றும் ஜே.வி.பியின் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் அரசின் நடவடிக்கைகளைப் பெரிதும் கண்டித்தனர்.

**கைதுகளை ஜெயராஜ் நியாயப்படுத்தினார்**

தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக சபையில் இருந்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் கண்டனம் தெரிவித்தமை ஆளும் தரப்புக்கு சிறிது எரிச்சலை ஏற்படுத்திவிட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த ஆளும் கட்சிக் கொரடாவும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, தலைநகரில் தமிழர்கள் கைது செய்யப்படுவதை நியாயப்படுத்தி அரசுக்கு வக்காலத்து வாங்கினார்.

புலிகள் இன்று அப்பாவிகளைப் போலவே கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்குச் சென்றவர் ஓர் அப்பாவிப் பெண்ணைப் போலவே சென்றார். அதே போன்று நுகேகொடவில் வெடிகுண்டு பார்சலை வைத்தவரும் சாதாரண ஒரு பெண்ணைப் போலவே சென்று பார்சலை வைத்துள்ளார். இப்படியான நிலையில் புலிகளையும், அப்பாவிகளையும் எப்படி இனம் காண முடியும்? சந்தேகம் ஏற்படும்போது கைதுகள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாது. கைதுகள் தொடரத்தான் செய்யும். அடையாள அட்டைகளை முற்றும் முழுதுமாக நம்பிவிட முடியாது. புலிகளும் கூட அடையாள அட்டைகளைத் தயாரிக்கின்றனர். இவர்கள் வைத்திருக்கும் அடையாள அட்டைகள் உண்மையானவைதானா என்று கண்டறியும் வரை தடுத்து வைக்கத்தான் வேண்டும்.

அப்பாவித் தமிழ் மக்களைக் கைது செய்கிறோம் எனக் கூட்டமைப்பு உறுப்பி னர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அப்படியானால் புலிகளை அவர்கள் அடையாளம் காட்டட்டும், நாம் அப்பாவிகளை விடுதலை செய்கின்றோம். - என்றார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் இந்த இடக்கு முடக்கான பேச்சு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டு மல்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்குமே எரிச்சலை அதிகரிக்கச் செய்தது. இதனால் பல முனைகளிலும் இருந்து கண்டனக் குரல்கள் கிளம்பின.

**நாட்டுக்குத் தலைகுனிவு என்று கிரியெல்ல பெரும் விசனம்**

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல அரசின் இந்தச் செயல் நாட்டிற்கே பெரும் தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது. இது ஒரு வெட்கக் கேடான விவகாரம் என்றார்.

இலங்கை 2500 வருடங்களாக பௌத்த போதனைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடு.

தர்மத்தைப் போதிக்கும் ஒரு நாட்டில் தனிப்பட்ட முறையில் தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர். வகை தொகையின்றிக் கொல்லப்படுகின்றனர். நாம் பௌத்தர்கள் என்று கூறுவதற்கே வெட்கப்பட வேண்டும்.

தலைநகருக்குப் பல்வேறு தேவைகளுக்காக வந்த தமிழர்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர், வயோதிபர் என்ற வயது வித்தியாசம் இன்றி பூஸா முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலைக்குள்ளாகி இருக்கின்றனர் தமிழர்கள்.

ஏற்கனவே தலைநகரில் இருந்து தமிழர் கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையை உயர் நீதிமன்றம் கண்டித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது. அப்போது மூக்குடைபட்ட அரசு இப்பொழுது தமிழர்களைக் கைது செய்து சட்டத்திற்கும் நீதிக்கும் சவால் விட்டுள்ளது.

முன்பு விட்ட தவறை மீண்டும்செய்கின்றது. எனவே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். - என வலியுறுத்தினார் லக்ஷ்மன் கிரியெல்ல.

**அடையாள அட்டையும் பதிவும் அர்த்தம் ஏதும் அற்றவையா?**

கடத்தப்பட்டோர் , காணாமல் போனோர், கைது செய்யப்பட்டோர் தொடர்பான விவரங்களைக் கண்டறியும் குழுவின் உறுப்பினரும், வாழ்க்கைத் தொழில் மற் றும் தொழில் பயிற்சிகள் பிரதி அமைச் சருமான பெ. இராதாகிருஷ்ணன், அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர்களின் பதிவு அத்தாட்சிப்பத்திரம் என்பன படையினரால் உதாசீனப்படுத்தப் பட்டுள்ளன என்றார்.

தம்மை ஒருவர் அடையாளம் காட்டுவதற்கு அரசினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை விட வேறு என்ன வேண்டும்? அத்தனை ஆவணங்களையும் தம்முடன் வைத்திருந்த தமிழர்கள் கைது செய் யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள் ளனர்.

நாம் அரசுக்கு ஆதரவு வழங்குகின்றோம். ஆனால் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு எம்மால் பதில் சொல்லமுடியாது தடுமாற்றம் அடைகின்றோம்.

கொழும்பிலும் பிற நகர்ப்புறங்களிலும் தமிழர்கள் கைது செய்யப்படுவதை அறிந்து நானும், சகோதரர் மகேஸ்வரன் எம்.பி யும் கால்நடையாகவே அலரி மாளிகைக்குச் சென்றோம். ஆனாலும் ஜனாதிபதியைச் சந்திக்க முடியவில்லை.

**12பேர் நிற்கக் கூடிய கூட்டில் 50 பேர்**

கோட்டை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பார்த்தோம். 12 பேர் மட்டுமே நிற்கக் கூடிய ஒரு கூட்டில்ஐம்பது பேரைப் போட்டு அடைத்து வைத்துள்ளனர். ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் இருநூறு பேர் மலையகத் தமிழர்கள். இவர்கள் தொழிலுக்காக கொழும்பில் தங்கியிருப்பவர்கள்.

இப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் புலிகளா? இது திட்டமிட்டுத் தமிழர்களை அடக்கி ஆள முயலும் ஒரு செயலாகும்.

அரசு மனிதாபிமானத்துடன் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். - என இராதாக் கிருஷ்ணன் கூறினார். அடுத்து தி.மகேஸ்வரன் எம்.பி பேசினார்.

**மகேஸ்வரன் காட்டம்**

மேற்படி கைது நட வடிக்கைகளுக்கு எதிராக ஐ.தே.கட்சி யின் மகேஸ்வரன் எம்.பி. மிகக் காட்டமாக உரை யாற்றினார். ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ, அரசின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, மற்றொரு சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ அனை வரையும் அவர் வைது தள்ளினார்.

**புலிகளின் செல்வாக்கை அரசு உயரச் செய்கிறது**

மகேஸ்வரனைத் தொடர்ந்து பேசிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவும் அரசின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித் தார்.

அப்பாவித் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதை ஜே.வி.பி. வன்மையாகக் கண் டிக்கிறது. புலிகளை இனம் கண்டு கைது செய்யுங்கள். அதை நாம் ஆட்சேபிக்க வில்லை என்றார் அவர்.

ஆனால் அப்பாவித்தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருச்செல்வம் றோசம்மா

பண்டத்தரிப்பு, பற்றிமா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திருச்செல்வம் றோசம்மா நேற்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் தேவசகாயகம், வின்சன் ஜெயசீலன், கூறோஸ் தவசீலன், ஜெயசீலி, காலஞ்சென்ற ஜெயராணி, அன்ரன் ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
அன்ரன் ஜெயபாலன்
(மகன்)

*பற்றிமா வீதி,*
*பண்டத்தரிப்பு.*

### திருமதி தம்பிராசா நேசம்மா

ஆனைக்கோட்டை, பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பிராசா நேசம்மா நேற்று (03.12.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் மனைவியும் கமலா தம்பிராசா(கனடா- முன்னாள் அறிவிப்பாளர், ரூபவாஹினி கூட்டுத்தாபனம்), ஜெகநாதன்(நோர்வே), மகேந்திரன் (கொழும்பு), கங்காதரன்(ஆனைக்கோட்டை) ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
த.கங்காதரன்
(மகன்)

*பாடசாலை ஒழுங்கை,*
*ஆனைக்கோட்டை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.